ஆரிய நீதி] ॐ 14.

17 JAN
MADRAS

# தேவீ தேவதா.

# (देवी देवता)

எழுதியவர் :—

பண்டித கங்காப்ரஸாத் உபாத்தியாய, M. A.

மொழிபெயர்த்தவர்:—

பண்டித தர்மகாம்ஜீ

373

பிரசுரித்தவர் :

தேஹலி ஆர்ய ஸார்வதேசிக ஸபா, டெல்லி

மூலமாக

ஆர்ய ஸமாஜம்,

சைனுபஜார், மதருஸ்.

2000 பிரதிகள்] [விலை 0 0 6

223878

# தேவீ தேவதா.

தேவீ தேவதை சம்பந்தமாக நமது ஜனங்களுக்குள் மிகுந்த தப்பபிப்பியம் ஏற்பட்டிருக்கிறது. அதை யாரும் திருத்த முன்வருவதில்லை. பாரத நாட்டில் முப்பத்துமூன்று கோடி தேவர்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. ஆனால் அவர்களுடைய பெயரென்ன, அவர்கள் வசிக்குமிடம் எது, மனிதர்களுடைய வாழ்க்கைக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதை யாரும் அறியமுயற்சிக்கவில்லை. அந்நிய நாடுகளிலும் பல கணக்கான தேவதைகளை கொண்டாடுகிறார்கள். அவைகள் உயிருள்ளவைகள். நம்மீது அவைகள் சினங்கொண்டு துன்பம் தரும், களிப்பெய்தி சுகம் தரும் என்று சாதாரண ஜனங்கள் எண்ணுகிறார்கள். சில தேவதைகள் சாதாரண பூஜையினாலேயே திருப்தியடைகின்றன. மற்றும் சில தேவதைகளை திருப்தி செய்ய, வெள்ளாடு, செம்மறியாடு, எருமைக்கிடா, பன்றி, கோழி முதலியவைகள் வேண்டியதாகின்றன. காட்டு ஜனங்கள் மனிதர்களையும் பலி கொடுக்கிறார்கள். ஆப்ரிக்கா கண்டத்து காட்டு மனிதர்கள் மனித உருவுள்ள மரத்தை திருப்திசெய்வதற்காக தம்முடைய பெண் பிள்ளைகளையும் கொடுத்து விடுகிறார்கள். நமது நாட்டில் காளிக்கு எருமைக்கிடா வெட்டுகிறார்கள். கார்த்தேஜ்

வாசிகள் பால் (Baal) தேவதையை சந்தோஷப்படுத்துவதற்காகத் தம்முடைய ஆண்பிள்ளைகளையே பலியாக்கி விடுகிறார்கள். இவைகளால், மனிதர்களுடைய மனதில் தேவி தேவதைகள் விஷயமாக மிக்க மதிப்பு உண்டாயிருப்பதாக தெரிகிறது. ஆகையால் இங்கு நாம் வெவ்வேறு மதங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறோம்.

வினா :—ஒரு அரசனுடைய அதீனத்தில் கலெக்டர், கமிஷனர் முதலிய ஊழியர்கள் இருந்துக்கொண்டு ராஜ காரியங்களை நடத்துவது போல இத்தேவதை களெல்லாம் கடவுளுடைய அதீனத்திலிருக்கின்றனவா ?

விடை :—இது சரியல்ல. அரசன் அற்பசக்தியுள்ளவனும் ஒரு இடத்தில் இருக்கும் தன்மையுள்ளவனு மாகையால் அவனுக்கு ஊழியர்களை நியமித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஈசுவரன் சர்வசக்திமான், சர்வவியாபகன். அவனில்லாத இடமே கிடையாது. ஒவ்வொரு காரியமும் அவர் சுயமாகவே செய்யவல்லவர். ஆகையால் அவருக்கு தேவதைகளின் உதவி தேவையில்லை.

வினா :—உலகத்தில் ஆறு மலை முதலிய பல வஸ்துக்கள் இருக்கின்றன. அவ் வொவ்வொன்றுக்கும் அத்யக்ஷர் (மேல் பார்வையாளர்)களாக இருப்பவர்களை ஏன் தேவர்கள் என்று கொள்ளக்கூடாது ? நெருப்புக்கு அக்னி தேவதை, ஜலத்துக்கு வருணன், காற்றுக்கு வாயுதேவன், காலை நேரத்து அதிதேவதை உஷா. இன்னும் இதுபோன்றவைகள் இருப்பது போல தான்.

விடை:—உன்னுடைய இந்தப்பேச்சு ஆராய்ச்சியற்றது ஒவ்வொரு வீட்டிலும் நெருப்பு எரிகிறது. அந்த நெருப்பு

களுக்கெல்லாம் தனித்தனி தெய்வங்களோ அல்லது எல்லா நெருப்புகளுக்கும் ஒரே தெய்வமோ காணபதில்லை.

தனித்தனியாக இருக்கிறதென்றால் அவைகள் நெருப்பு மூட்டப்படும்போது முளைத்து, அணைத்து விடும்போது மாண்டுவிடும். எல்லா நெருப்புக்கும் ஒரே தெய்வமென்றால் ஒரு ஆற்றுக்கு இரண்டு கரையிலும் தீ மூட்டினால் இரண்டு நெருப்புக்கும் அது எப்படி தலைவனாக இருக்க முடியும்? ஏனெனில் நடுவில் வருணபகவான் இருக்கிறாரே! அக்னி பகவான் எல்லா வஸ்துகளிலும் வியாபித்திருக்கிறாரென்று சொன்னால், உலகத்தில் அக்னி தேவதையொன்றே போதும். வருண தேவதை அவசியமில்லை.

வினா :—வேதங்களில் அநேக தேவதைகள் சொல்லப்பட்டிருப்பதின் கருத்தென்ன ?

விடை:—பூமி, சூரியன் முதலியவைகள் திவ்வியகுணங்களுள்ளவைகளாதலால் அவைகளே தேவதைகளெனப்படுகின்றன. ஆனால் இவைகளைக் கடவுளென்றோ, வணங்கத் தகுந்தவைகளென்றோ சொல்லவில்லை. எந்த பரமேசுவரனில் இத்தேவதைகளெல்லாம் அடங்கி இருக்கின்றனவோ அவரே அறியவும் உபாசிக்கவும் தகுந்தவர் என்று வேதத்தில் சொல் லப்பட்டிருக்கிறது. தேவதை என்னும் பதத்துக்கு கடவுள்என்று பொருள் கொள்வது தப்பு. "த்ரயத்ரிம் சன்த்ரிசதா" முதலிய வேதபிரமாணமுளது. சதபதத்தில் இந்த மந்திரத்துக்கு உரை செய்யப்பட்டிருப்பதைப் படியுங்கள். பிருதிவி ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள் இவைகளெல்லாம் வாசஸ்தானமாகையால் இந்த எட்டும் வசுக்களெனப்படுகின்றன. பிராண, அபான, வியான, உதான, சமான, நாக, கூர்ம, க்ருகல,

தேவதத்த, தனஞ்ஜய, ஜீவாத்மா இந்த பதினொன்றும், ரத்தை விட்டுப் பிரியும்போது அழச்செய்கின்றனவாதலா ருத்ர எனப்படுகின்றன. எல்லாருடைய ஆயுசுகளையும் அப ரிப்பதால் வருஷத்திலுள்ள பன்னிரண்டு மாதங்களுப ஆதித்ய எனப்படுகின்றன. சகல சம்பத்துக்களுக்கும் காரண மாக இருப்பதால் மின்னலுக்கு இந்திரன் என்று பெயர். யாகத்தினுல் காற்று, மழை ஜலம், சுத்தமாகின்றன. வித்வான் களுக்கு ஆதரவும் நானுவிதமான சிற்ப வித்தையினுல் பலருக் கும் பிழைப்பும் ஏற்படுவதால் அதற்கு ப்ரஜாபதி என்று பெயர். மேலே சொல்லப்பட்ட குணங்களோடு கூடியிருப்ப தால் இந்த முப்பத்து மூன்றுக்கும் தேவர்கள் என்று பெயர் இவைகளுக்கெல்லாம்சுவாமியாயும், எல்லாவற்றிற்கும்பெரியவ ராயும், மேலேசொன்ன 33 தேவர்களுக்கும் தேவராக இருப்ப தாலும், கடவுளுக்கு மகாதேவன் என்று பெயர். 34-வதாக இருக்கிற இந்த பரமாத்மாதான் உபாசிக்கத் தகுந்தவர். என்று சதபத பிராம்மணம் பதினுலாவது காண்டத்தில் விளக்கமாக எழுதியிருக்கிறது. அந்த ஈசுவரன்தான் எல்லா ஜகத்தை யும் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் செய்பவராயும், நியாயாதீசரா யும் அதிஷ்டாதாவாயுமிருக்கிறுர். (சத்தியார்த்த பிரகாசம் அத்தியாயம் 7)

வினு :—ஆனுல் ஜலம் முதலியவைகள் தானு தேவதை கள்?

விடை :—ஆம், அவசியம்.

வினு :—இவைகளைத் தானு பூஜிக்கவேண்டும்?

விடை :—இல்லை. கடவுளை மாத்திரம் பூஜிக்கவேண்டும் அந்திய தேவதைகளை அல்ல.

வினு :—தேவன் என்பதற்கு பொருள் என்ன?

விடை :—கேளுங்கள் (1) வித்துவான்களுடைய பெயர் தவர்கள், பெண் மக்களே தேவிமார் என்பது இப்பவும் ழங்குகிறது. இதே கருத்து சதபதத்தில் 'வித்வாம்ஸோஹி ீதவா: என்று கூறப்பட்டிருக்கிறது. (2) புலன்களுக்கும் தேவதை என்று பெயர். யஜுர்வேதம் நாற்பதாவது அத்தி யாயம் நாலாவது மந்திரம் சொல்லுகிறது. **नैनद्देवा आप्नुवन् पूर्वमर्षत् ।** புலன்களால் கடவுளைக் காணமுடியாது; பிரகாசிக் கும் வஸ்துக்களுக்கும் தேவதைகள் என்று பெயர், நிருக்தத் தில் எழுதப்பட்டிருக்கிறது.

**देवा दानाद्वा दीपनाद्वा द्योतनाद्वा द्युस्थाने भवतीति वा ।**

(நிருக்தம் அ 7, க 15.)

தானம் கொடுப்பவன் தேவதை. பிரகாசிப்பது தேவதை வேறு வஸ்துவையும் ஒளிதரும்படியாக செய்வதும் எதில் ஒளிதரும்படியான வஸ்து இருக்கிறதோ அவைகளும் தேவதைகள்.

வினு :—ஆனல் நம் வீட்டு விளக்குகளெல்லாம் தேவ தைகள் தானு? இது சிரிப்புக்கிடமான பேச்சு அல்லவா?

விடை:—இதில் சிரிப்பு என்ன. ஒளியுள்ள வஸ்துக் களுக்கு 'தேவ' என்று நமது சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. உண்மையை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

வினு :— கண்ணுக்கு தென்படுகிற பௌதிக வஸ்துக்க ளெல்லாம் சரீரமென்றும் அவைகளுள் தேவதைகள் இருக் கின்றன என்றும் ஏன் சொல்லக்கூடாது. நமது சரீரங்களில் ஜீவன் வியாபித்திருப்பதுபோலக் கண்ணுக்குப் புலப்படும்

கங்கை ஜலத்தில் கங்காதேவி அந்தர்யாமியாக என் இரு முடியாது?

விடை:—தம்பி! அப்படியல்ல. சரீரத்தினுடைய லக்ஷணமேநீ அறியவில்லை. கௌதமர் நியாயசாஸ்திரத்தில் சொல்லு வதைக்கேள் चेष्टेन्द्रियार्थाश्रयः शरीरम् । (1, 1, 11) தொழில் பொருள், புலன்கள் இவைகளுக்கு காரணமாக இருப்பது சரீரம். கங்கா ஜலத்திலுள்ள தேவிக்கு புலன்களேது? கங்காதேவி தொழிலென்னசெய்கிருள் 'தேவதா' சப்தம், ஜடம், சேதனம், இரண்டையும் குறிக்கிறது. கங்கா ஜலமும், கங்கா நதியும், ஜடங்கள், அதற்கு அறிவு கிடையாது. ஆகையால் அது யார்மேலும் கோபமோ, சந்தோஷமோ அடைய முடியாது. உனக்கு திறமையிருந்தால் கங்கைநதியில் ஓடக்கைச் செலுத்தலாம். தப்பித்தவறி நடு ஆற்றுச் சுழலில் அகப்பட்டுக்கொண்டுவிட்டால் உயிரையும் இழக்க நேரிடும். சிங்கம் முதலிய பிராணிகளுக்கு அறிவு இருக்கிறது. அவைகளுக்கு எதன்மேல் கோபம் வருமோ அதைக்கொல்லும். தனக் கிஷ்டமான பிராணிகளுடன் சந்தோஷமாகக் கூடியிருக்கும் ஆனல் நெருப்பு ஜடம், அதில் எந்த வஸ்து விழுந்தாலும் எரியும். நெருப்பில் அறிவுள்ள தேவதையிருந்தால் அது நெருப்பில் விழும் தனது பக்தர்களை எரிக்காது.

வினு:—கணேசன் தேவதையல்லவா?

விடை:—கணேசன். கணபதி முதலிய பெயர்கள் கடவுளையே குறிக்கின்றன. ஏனெனில் கடவுள் எல்லாவற்றிற்கும் யஜமானர். இப்பெயர்களை மனிதர்களும் வைத்துக்கொள்ளலாம். அதாவது இப்பெயர்களுள்ள மனிதர்களும் இருக்கக் கூடும். ஆனல் பரமசிவன் அல்லது மகாதேவன் ஒரு கடவுள் அல்லது தேவதை! அவருடைய பிள்ளை, பிள்ளையார்

ருடைய மனைவி, பார்வதி; என்றெல்லாம் சொல்வது மயக் . ஏனெனில் தேவதைகளும், மனிதர்கள்போலவே தின் து, பருகுவது, போகவிலாசம் பண்ணுவது, குழந்தைகளைப் பறுவது எல்லாம் செய்தால் நமக்கும் அவருக்கும் பேத மென்ன? அவ்விதம் பிறந்த குழந்தைகள் இறந்தும்போ இருக்குமே. அவர்கள் இறப்பதேயில்லையென்றால் 33-கோடி தேவதைகளின் பிள்ளைகள், பேரன்கள் இவ்விதமாக மேலும் மேலும் அவர்களுடைய சந்ததி பெருகி வந்திருந்தால் இப் பொழுது அந்த கூட்டம் கோடி கோடியாக நெருங்கிக்கொண்டு கிடக்குமே! நல்லது. யோசித்துப்பாருங்கள். மகாதேவனு டைய மனைவி பார்வதி. அந்தம்மாளுடைய பிள்ளை கணேசன். அதற்கப்புறம் என்ன? வம்சம் அற்றுப்போய்விட்டதா? ஜனங் களுக்கு "பொய் மூட்டை" யவிழ்க்கத் தெரிகிறதே யொழிய அதனுடைய முடிவை யோசிக்கத் தெரிகிறதில்லை. வேதங்க ளில் சிவன், விஷ்ணு, கணபதி முதலிய பெயர்கள் பரமேசு வரனையே குறிக்கின்றன. ஜனங்கள் தவறாக பிரம்மா, விஷ்ணு, மகேசுவரன் என்று வெவ்வேறாகச் செய்துவிட்டார்கள் ஆகையால்தான் இவர்களை வணங்குவோர்கள் பரஸ்பரம் சண்டை சச்சரவும், வெறுக்கவும் செய்கிறார்கள்.

வினா:—ஆனால் தேவி தேவதைகளுடைய கதைகள் சொல்லப்படுகின்றனவே அவைகளெல்லாம் பொய்தானா?

விடை:—நீங்கள் ஒப்புக்கொள்ளும் விதத்தில் பொய்யே! ஆம் ஒவ்வொரு சமயத்தில் பெரிய பெரிய பரோபகாரிகளும் வீரர்களுமான புருஷர்களை தேவதை அல்லது தேவர்கள் என்று அழைப்பதுண்டு. முன் காலத்தில் அந்த மகாதேவர் ஏதாவதொரு நாட்டுக்கு அரசனாக இருந்திருக்கலாம். மலை நாட்டில் பிறந்த அந்த மாதா பார்வதி அவருடைய மனைவி யாக இருக்கலாம். இவர்களுடைய பிள்ளையின் பெயர் கண

பதியாயும் இருக்கலாம். ஆனால் தசரதரின் குமாரர
இராமனை, அவர்மீதுள்ள அன்பு, ஆதரவு காரணமாக, வேசுவரனென்றே நம்பிவிட்டதுபோல ஷி மகாதேவ டைய குடும்பத்தையே கடவுளாக்கிவிட்டார்கள்.

வினா :— அப்படியானால் இராமர் கடவுளல்லவா ?

விடை :—ஈசுவரன் அவதாரம் செய்கிறார் என்பதே சரியல்ல. ஈசுவரனை அஜன், நிர்விகாரன் என்று வேதம் சொல்லுகிறது. அஜன்மா, ஜன்மமெப்படியெடுப்பார்? ஈசுவரன் சப்தத்துக்கு அரசன் என்றும் பொருள் படும். நரேசுவரன், நரேசன் என்பதுபோல, அரசன் என்று பொருள்படும் 'ஈசுவர' சப்தத்தை, ராமர், அரசன் என்பதை காண்பிப்பதற்காக யாராவது உபயோகித்திருப்பார்கள். ஜனங்கள் அதையே பிடித்துக்கொண்டு ராமர், ஜகத் சிருஷ்டிகர்த்தாவான பரம் பொருளை என்று எண்ணி விட்டார்கள்.

வினா :—'ஈ ச் வ ர' சப்தம் தனியாக அரசன் என்று பொருள் படுவதில்லையே?

விடை :— நாம் காட்டுகிறோம்.

अपित्वामीश्वरं प्राप्य कामवृत्तं निरंकुशम् ।
न विनश्येत् पुरीलंका त्वया सहसराक्षसा ॥

2238

(இது வால்மீக ராமாயணத்தின் சுலோகம்.)

கட்டுக்கடங்காதவனும், இஷ்டப்படிசெய்கிறவனுமான உன்னை அரசனாகப் பெற்ற இலங்கை, உன்னையும் மற்ற ராக்ஷசர்களையும், கூட்டிக்கொண்டு அழிந்துவிடாமல் இருக்கவேண்டுமே என்ற மாரீசன் ராவணனுக்குச் சொல்லுகிறான். இந்த

..த்தில் ஈசுவர சப்தம் தனியாக, அரசன் என்னும் அர்த்..த்தில் உபயோகப்பட்டிருக்கிறது. இன்னும் பாருங்கள்.

ईश्वरस्य निशाटानां विलोक्य निखिलां पुरीम् ।
कुशलोऽन्वेषणस्याऽहमायुक्तो दूत-कर्मणि ॥

(இது பட்டிகாவ்யத்தின் எட்டாவது சர்க்கம் 115வது சுலோகம்.)

(ராக்ஷஸர்களுடைய அரசனான ராவணனுடைய முழு பட்டணத்திலும் சீதையைத் தேடுவதற்காக நான் தூதனாக செய்யப்பட்டிருக்கிறேன்.) இங்கும் 'ஈசுவர' சப்தத்துக்கு அரசன் என்று பொருள்.

வினா:—ஆயினும் அந்த தேவதைகளை நாங்கள் நம்புவதில்லை என்று சொல்லுவதற்கு பயமாகத்தானிருக்கிறது. அவைகள் ஒருவேளை நம்மீது கோபித்துக்கொண்டு நம்மை என்னசெய்துவிடுமோ என்றே தோன்றுகிறதே?

விடை:—இது உனக்கு வீண் பயம். கோடிக்கணக்கான ஜனங்கள் இத்தேவதைகளை நம்புவதில்லை. அவர்களை எந்த தேவதையும் எதுவும் செய்வதில்லை. தவிர, பொய்யான வஸ்துக்களை நம்பி, அவைகளுக்குப் பயந்துகொண்டு கிடப்பதும் அல்லாமல், அவைகளுக்கு பூஜை, உத்சவம், என்று பொருள், உழைப்பு, காலம் இவைகளையெல்லாம் வீணே அழிக்கின்றீர்கள். அதோடு பரமபிதாவான பரமேசுவரனை பூஜை செய்வதால் கிடைக்கும் பயனையும் தொலைத்துக்கொள்ளுகிறீர்கள். ஒருவன் ராமனை பூஜிக்கின்றான். ஒருவன் மகாதேவனை வணங்குகிறான். மற்றொருவன் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்கிறான். இன்னுமொருவன் காளிக்கு கும்பிடுகிறான். ஒவ்வொருவனும் இந்த தேவதைகளின் பேரால் ஒவ்

வொரு பொம்மையை வைத்துக்கொண்டு, எவ்விதத்தி நமக்கு கருணை செய்யும் சச்சிதானந்த ரூபியான பரம மாவை பூசிக்காமல், முற்றிலும் முறனான வழியில் செல் கிறான். உங்களுடைய தேவீ தேவதைகளெல்லாம், பிர மமா, ஜீவனா அல்லது ஜடமா என்று கேட்கிறோம். ஏனெனில் அவைகள் ஜீவர்களாக இருந்தால் நமக்கும் அவர்களுக்கும் என்ன பேதம் இருக்கமுடியும்? பிரம்மமுமல்ல.

வினா:—ஏன் பிரம்மத்தின் அம்சமாக இருக்க முடியாது?

விடை :—நன்றாக சொன்னீர்கள்! பிரம்மத்துக்கு அம் சம்கூட உண்டா? பிரம்மம் அகண்டம். அவினாசியானது அது துண்டுதுண்டாகப் பிரிய முடியாது. பிரளய காலத்தில் இவைகளெல்லாம் என்ன கதியடையும் இவைகள் பிரம்மத் தின் அம்சமானால் பிரளய காலத்தில் ஒன்றுகூட உருவாக இருக்காதே. அவைகள் போக யோனிகளா, கர்மயோனிகளா அல்லது இரண்டுமா? கர்மயோனி என்றால் பொருந்தாது. ஏனெனில் புராணங்களில் அவைகள் சண்டை சச்சரவு செய் வதாகவும். சாப்பிடுவதுபோன்ற போகங்களை உடையதாகவும் எழுதியிருக்கிறது. வெறும் போகயோனி என்றால் அவை கள் மிருகங்கள்போன்றதாய்விடும். கர்மயோனி, போகயோனி இரண்டுமென்றால் மனிதர்களைப்போல அவைகளையும் பாவம், புண்ணியம் இரண்டும் பற்றிக்கொள்ளும். இவ்விதமாக இன் னும் பல வினாக்களும் எழுகின்றன. ஒருபக்கம் அவைகள் பூசிக்கத் தகுந்தவைகள் என்கிறார்கள். இன்னொருபக்கம் சண்டைச் சச்சரவுக்கும் ராகத்துவேஷத்துக்கெல்லாம் அவை கள் காரணங்களாயிருக்கின்றன என்கிறார்கள். இது விசித் திரமான பேச்சாகஇருக்கிறது. துளசி தாசர் சொல்லுவதைக் கேளுங்கள்.

सकल कहहिं कब होइहि काली ।
विघ्न मनावहिंदेव कुचाली ॥
तिनहि सुहातन अवध बधावा ।
चोरहि चांदिनि रात न भावा ॥

பொழுது விடிந்தால் இராமருக்கு பட்டாபிஷேகம். ஜனங்கள் ஆவலாக எதிர்பார்த்தவண்ணமாக இருக்கிறார்கள். ஆனால் தேவர்களுக்கு அயோத்தி ராஜ்யம் முன்னேற்ற மடைந்து, பெருமையடைவது, சகிக்கவில்லை. கெட்ட நடத்தையுள்ள அவர்கள் இடையூறு செய்ய எண்ணினார்கள். உண்மைதான்! திருடர்களுக்கு நிலா இரவு பிடிக்காதல்லவா! சுவர்க்கத்திலுள்ள தேவதைகளை கெட்ட நடத்தையுள்ளவர்களாக இருந்து அவர்களை திருடர்போன்றவர்கள் என்றால் இவ்வுலகத்திலுள்ள மனிதர்களுடைய கதி என்ன?

வினா:—நல்லது. சிவன், விஷ்ணு, கணேசன், சூரியன் இவர்களுடைய 'பஞ்சாயதன' பூசை எப்படி செய்வது?

விடை:—பஞ்சாயதன பூசை என்பதற்கு பல அர்த்தம் உண்டு. ஆனால் மூடர்கள் அதனுடைய உயர்ந்த பொருளை விட்டு நீசமான அர்த்தத்தைக் கைகொண்டு சிவன் முதலிய ஐவர்களுடைய உருவங்களை பூசை செய்கிறார்கள். இதை தப்பென்று மேலே சொல்லிவிட்டோம். ஆனால் இங்கு வேதங்களில் சொல்லப்பட்ட, வேத சாஸ்திரானுகூலமான தேவ பூசையையும், மூர்த்தி பூசையையும் சொல்லுகிறோம்.

मा नो वधीः पितरं मोत मातरम् । (யஜு॰ 16, 15)

आचार्यो ब्रह्मचर्येण ब्रह्मचारिणमिच्छते ।

(அதர்வம் கா 11, வ 5, ம 17.)

अतिथिर्गृहाना गच्छेत् । (அதர்வ கா 15. வ, 1, ம 6.)

अर्चत प्रार्चत प्रियमेधासो अर्चत । (ருக்வேதம்)

त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि त्वामेव प्रत्यक्षं ब्रह्मवदिष्यामि ।

तैतिरीयो. वल्ली. १ । अनु. १ ।

कतम एको देव इति स ब्रह्म त्यादित्याचक्षते शतपथ ॥

का. १४ । प्रपा. ६ । ब्राह्म. ७ । कं. १० ॥

मातृदेवो भव पितृदेवो भव आचार्यदेवो भव अतिथिदेवो भव।

तैत्तिरीयोपनि. । व. १ अनु. ११ ।

पितृभिर्भ्रातृभिश्चैताः पतिभिर्देवरैस्तथा ।

पूज्या भूषयितव्याश्च बहुकल्याणमीप्सुभिः ॥

(मनु. अ. ३ । ५५ ॥)

उपचर्यः स्त्रियासाध्व्या सततं देववत्पतिः । (மனுஸ்ம்ருதி)

முதலில் பூசிக்கத்தகுந்த மூர்த்தியான தேவதை தாய் தான். அவளுக்கு, உடல் பொருள்களால் சேவைசெய்து, எவ் விதமான துக்கமும் உண்டாகாமல் சுகமாக இருக்கச்செய்து உபசரித்துவருவது. இரண்டாவதாக பூசிக்கக் தகுந்த மூர்த் தியான தேவதை தகப்பன். மாதாவைப்போல் பிதாவையும் அன்புடன் உபசரித்து, சந்தோஷமாக வைத்திருப்பது. மூன்றுவதாக, ஆசிரியன் அல்லது குரு அதாவது நமக்கு கல்வியளிப்பவர். இவரையும், மன, தன, மெய், மொழிக ளால் பணிவிடை செய்து, திருப்தி செய்யவேண்டும். இவரும் பூசிக்கத்தகுந்த, மூன்றுவதான மூர்த்தியுள்ள தெய்வம் தார்மிகருமம், நிஷ்கபடியும், எல்லாருடைய மேன்மையையும்

ம்புகிறவரும், சத்திய சாஸ்திரங்களை பிரசாரம் செய்து, ஜைகளின் சுகத்தை விருத்தி செய்துகொண்டு, உலகமெல் ம் சுற்றிக்கொண்டிருக்கும் வித்துவான் அதிதிஎனப்படுவர். ந்த மூர்த்தி நான்காவது தெய்வம். இவருக்கும் விசேஷமாக தொண்டு செய்ய வேண்டும். ஐந்தாவதான உருவுள்ள தெய் வ புருஷனுக்கு மனைவியும், மனைவிக்கு புருஷனுமாம். புரு க்கு மனைவி அன்புடன் சேவை செய்யவேண்டும். புரு னும், உருவுடன் விளங்கும் ஐந்தாவது தேவதையான மனைவியை அன்புடனும் ஆதரவுடனும் பூசிக்கவேண்டும். அதாவது அவர்களுக்கு மனங்கோணுமல் தேவையானதைத் தந்து அவர்களை கௌரவமாகவும் மரியாதையாகவும் வைத்தி ருப்பது- எவர்களுடைய சம்பந்தத்தினுல் நமது சரீரங்கள் உண்டாகின்றனவோ, ரக்ஷிக்கப்படுகின்றனவோ, சத்தியோப தேசமும், உண்மையான கல்வியையும் அடைகிறேமோ அந்த பஞ்ச மூர்த்திகளான தேவர்கள் தான் பரமேசுவரனை அடைவ தற்கு ஏணி அல்லது படிகள்போன்றவர்கள். இவர்களை சேவிக்காமல் பாஷாணுதி மூர்த்திகளை பூசிக்கிறவர்கள் வேத விரோதிகள்

வினு:—தாய் தந்தையர்களையும் சேவித்துக்கொண்டு அதோடு விக்கிரகாராதனையும் செய்துவருவதில் குற்ற மில்லையே?

விடை:—பாஷாணுதி மூர்த்தி பூசையை முற்றிலும் ஒழிப்பதுதான் க்ஷேமகரமானது. பிரத்தியக்ஷமாக சுகத்தைத் தருகிற மாதா முதலிய சாக்ஷாத் தேவர்களை விட்டு, அதேவ (தேவரல்லாத) மான கற்களில் தலையை முட்டிக்கொள்ளும் வழக்கத்தை ஏற்றுக்கொள்கிறதானது, எவ்வளவு அனர்த்த மான காரியம்! மாதா பிதா முதலியவர்கள் முன்னுல் சர்க்கரைப் பொங்கல், வடை முதலிய நைவேத்தியங்களை வைத்தால்,

அவர்கள் தின்றுவிடுவார்கள், காணிக்கை வைத்தாலும் எ
துக்கொண்டு விடுவார்கள். நமது வாய்க்கும் கையிக்கும் எ
வும்எட்டாது என்று எண்ணிதான்போலும் கல்லேக் கும்ப
டும் வழக்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. கல், கட்டை முத
லியவைகளால் சிலேகளேச் செய்து, அவைகளின் முன்னல்
நைவேத்தியங்களே வைத்து, சங்கு, மணி, மேளங்களே ஓசைப்
படுத்தி, டண், டண், பூ, பூ, என்று பெரிய கோலாகலம்
செய்து, சிறுவர்கள் தின்பண்டங்களே, தம் கூட்டாளிகளுக்
குக் காட்டி அவர்களுக்கு கொடுப்பதாக பாசாங்கு செய்து,
அவர்களுடையமுன்னுலோ அல்லது தம் உள்ளங்கைகளிலோ
வைத்துக்காட்டி, அக் கூட்டாளிகள், தின்பண்டம் தமக்கு
உண்மையில் கொடுக்கப்படுவதாக நம்பி, கையை நீட்டி அதை
எடுக்கவரும் தருணத்தில், சட்டென்று அதைத் தமது வாயில்
போட்டுக்கொண்டு அவர்களுக்கு கட்டை விரலேக் காட்டி
கேலி செய்து சிரித்து அவமானப்படுத்துவதுபோல பூசாரி
களும் சிலேகளுக்கு கட்டை விரலேக் காட்டிவிட்டு எல்லா
சாமான்களேயும் மூட்டைக் கட்டிக்கொண்டு சென்றுவிடு
கிருர்கள்.

பூஜா + அரி-பூஜாரி, பூஜை, என்னும் ஸத்காரியங்களுக்கு,
அரி, சத்துருக்கள். பெயருக்குத் தகுந்த தொழில்! தொழி
லுக்குத் தகுந்த பெயர்!

வெங்கலச் சிலேகளேத் தேய்த்து பளபளப்பாகச்செய்து
கை, கால்களே வைத்துக்கட்டி, சரிகை பட்டுத்துணிகளேயும்,
மின்னுகின்ற ரத்னங்கள் பதித்த நகைகளேயும் அணிவித்து,
தாங்களும் அலங்கரித்து நின்றுகொண்டு எளிய, அறிவற்ற,
திக்கற்ற, மூட ஜனங்களே ஏமாற்றிப் பொருள்பறித்து
மோசம் செய்கிருர்கள். இங்கு தர்மசீலனுன அரசன் இருந்
தால் இந்த பாஷாணபிரியர்களே எல்லாம், கற்களே உடைப்பது,

...துக்குவது சுவரெழுப்பி வீடுகள் கட்டுவதுபோன்ற வேலையில் ஈடுபடுத்தி, சாப்பாட்டுக்கும் மற்ற சிலவுக்கும் கொடுத்து காப்பாற்றிவருவான்.

**(ஸ்த்யார்த்தப்ரகாசம் 11-வது அத்தியாயம்)**

விக்ரக ஹாராதனையில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்று இப்பொழுது தெரிந்துவிட்டது. வாஸ்தவத்தில் இதனால்தான் பாரத தேசத்திற்கு மிகுந்த துன்பங்கள் அனுபவிக்கவேண்டிவந்தன. இந்தச்சிலை தெய்வங்கள் தாம் தம்மையே காப்பாற்றிக்கொள்ள முடியாதிருக்கும்பொழுது, அவைகளை வணங்குபவர்களைக் காப்பாற்ற அவைகளால் எப்படி முடியும்?

முகமூத் கஜ்னவியும் ஔரங்கஜேபும் இந்தச் சிலைச்சாமிகளின்மேல் படையெடுத்து அவைகளைத் தலைவேறாக கால் வேறாக உடைத்து எறிந்துவிட்டார்கள். இவ்வளவுக்கும், அந்த தேவதைகள், பேசாமல் மௌனம் சாதித்தன. பாரத நாட்டின் ஹிந்துக்கள் அடிமைகளாகப்பட்டன. ஆகையால் இந்த சாமிகளால் நமது காரியங்கள் நடக்காது. ஸச்சிதானந்த பரப்பிரஹ்ம நிராகார பரமேசுவரனையே உபாஸிக்கவேண்டும் அவராலேயே நமக்கு க்ஷேமமும் உண்டாகும்.

2-23878

முற்றிற்று.

குஜராத் பிரஸ், 27, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, ஜி. டி., மதராஸ்.